**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**ஆறாம் பருவம்**

| நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION) |
|---|

**ஜூலை–ஆகஸ்ட் – 2020**

**D041 மொழி வரலாறு –2**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. மாறுபட்டு ஒலிக்கும் ஒலி எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
2. தமிழ் எழுத்துகள் மொத்தம் எத்தனை?
3. காலச் சொற்கள் எதைக் குறிக்கும்?
4. இக்கால எழுத்துத் தமிழை வரலாற்று மொழியியலார் எவ்வாறு அழைக்கின்றனர்?
5. குறிப்புப் பெயரெச்சம் பழங்காலத்தில் எவ்வாறு வழங்கப்பட்டது?
6. ஆகுபெயருக்குச் சான்று தருக.
7. ஒலிகளின் பிறப்பினைத் தெரிவிக்கும் இயல் எது?
8. வருடொலிகள் எவை?
9. 'ஏ' முன்தோன்றும் உடம்படுமெய்கள் எவை?
10. கிளைமொழிக்கு வழங்கப்பெறும் வேறு பெயர் எது?
11. அரை உயிர்கள் என அழைக்கப்படுபவை எவை?

12. கொங்கு நாட்டில் ழகரம் எவ்வாறு உச்சரிக்கப்படுகின்றது?

13. யகரம் சகரமாக ஒலிப்பதற்குச் சான்று தருக?

14. சங்ககாலக் கிளை மொழியில் ஒன்பது எவ்வாறு அழைக்கப்பட்டது?

15. 'குந்து' என்பதற்கான பொருள் யாது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. உயிரெழுத்துகளை வகைப்படுத்துக.
2. சொல்லெழுத்து வரையறை என்றால் என்ன? சான்று தருக.
3. எழுத்துச் சீர்திருத்தத்திற்கு நான்கு சான்றுகள் தருக.
4. வேற்றுமை என்றால் என்ன? எத்தனை வகைப்படும்? அவை யாவை?
5. மரபு இலக்கண அறிஞர்கள் சொற்களை எத்தனை வகையாகப் பிரித்தனர்?
6. ஆகுபெயர் அல்லது சொற்பொருள் இயைபு என்றால் என்ன?
7. உயிர்எழுத்துகள் பிறக்கும் பாகுபாடுகளை எழுதுக.
8. மெய்யொலிகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) புணர்ச்சி மாற்றம் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) 'கள்' என்னும் பன்மை விகுதி காலந்தோறும் பயின்று வரும் இடங்களை விளக்குக.

2. (அ) காலங்காட்டும் இடைநிலைகள் குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) சொற்பொருளின் வகைப்பாடு குறித்து விளக்கி வரைக.

3. (அ) உயிரெழுத்துகளின் பிறப்பு குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) கிளைமொழிப் பாகுபாடு குறித்துக் கட்டுரை வரைக.

***